IN THE COURT OF III ADDITIONAL DISTRICT COURT,
TIRUVALLUR AT POONAMALLEE

**O.S.34**/2014

Deposition of witness for the Defendant/DW4

Name :Saraswathi Date: 07 .11.2022

Father's/Husband's Name: K.Suresh

**4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாசணை தொடர்ச்சி**

கோவிந்தசாமியும் பக்தவச்சலமும் 1979ல் இருந்து விஸ்வஜோதி பிரிக்ஸ் ஓர்க்ஸ் கூட்டாண்மை நிறுவன வருமானத்தை குறிப்பிட்டு வரி கட்டுகிவருகிறார்கள் என்றால் அவர்களும் மற்றவர்களும் சேர்ந்து கட்டிவருகிறார்கள். மற்றவர்கள் தனித்தனியாகத்தான் வருமான வரி கட்டிவருகிறார்கள் என்றால் சரிதான். 1993ல் இருந்து விஸ்வஜோதி பிரிக்ஸ் ஓர்க்ஸ்க்கு பங்குதாரர்களாக கோவிந்தசாமி, விஜயா, சுலோச்சனா மற்றும் சாந்தி ஆகியோர் பங்குதாரர்களாக இருந்து நடத்தி வந்தனர். பி3 தான் அந்த கூட்டாண்மை நிறுவன பத்திரம் என்றால் சரிதான். பி3 ல் மேனேஜிங் பார்ட்னர் என எங்கும் யாரையும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 1993லிருந்து கோவிந்தசாமி இறக்கும் 2009வரை பி3 தான் நடைமுறையில் இருந்தது என்றால் சரிதான். 1993 முதல் 2009 வரை விஸ்வஜோதி பிரிக்ஸ் ஓர்க்ஸ்ன் வருமானத்தை அனைத்து பங்குதாரர்களுக்கும் சமமாக பிரித்து கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. 1993லிருந்து 2009 வரை வருமானத்தை கொடுக்கவில்லை என்றும் ஆகையால் பிரித்துதருமாறு கேட்டும் நான் தாக்கல் செய்த ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பாக கேட்கவில்லை, பொதுவாக கேட்டிருக்கிறேன். பி51ல் 1993 முதல் 2007 வரையிலான பங்கு தொகையை கொடுக்கவில்லை என்று குறிப்பாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. செட்டில் ஆகவில்லை என்று குறிப்பிட்டுள்ளோம். பி53-ல் 1993 முதல் 2008 வரையிலான பங்கு தொகையை கொடுக்கவில்லை என்று குறிப்பாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. செட்டில் ஆகவில்லை என்று குறிப்பிட்டுள்ளோம். பி54-ல் 1993 முதல் 2009 வரையிலான பங்கு தொகையை கொடுக்கவில்லை என்று குறிப்பாக

சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. செட்டில் ஆகவில்லை என்று குறிப்பிட்டுள்ளோம். ஏ அட்டவணை சொத்தின் ஐடம் எண்கள்.8 முதல் 11 மற்றும் 16 ஆகியவை 04/03/1974 அன்று தாமோதரன், ராமமூர்த்தி, பக்தவச்சலம், கோவிந்தசாமி ஆகியோர் பெயரில் கிரைய பத்திரம் உள்ளது என்றால் சரிதான். இந்த சொத்துக்கள் அந்த நால்வரின் வாரிசுகளின் சுவாதீனத்தில் தான் தற்போது வரை இருந்து வருகிறது என்றால் சரியல்ல. ஏ அட்டவணை சொத்தின் 8 முதல் 11 மற்றும் 16 வரையான சொத்துக்கள் 2008 வரை அனைவரின் சுவாதீனத்தில் இருந்தது. அதற்கு பின்னிட்டு 7 முதல் 9 பிரதிவாதிகள் சுவாதீனத்தில் இருந்து வருகிறது. தமிழ்நாடு பிரிக்ஸ் இண்டஸ்டிரீஸ் என்ற  நிறுவனத்தை பக்தவச்சலம் நடத்தி வந்தார் என்றால் எனக்கு அது தெரியாது. கிருஷ்ண குமார் என்பவர் எப் அட்டவணை ெ சாத்தின் ஒரு பகுதியில் லாரி வாடகை சர்வீஸ் நிறுவனம் நடத்தி வந்தார் என்றால் எனக்கு தெரியாது. அவ்வாறு அவர் நடத்தி வந்தார் என்றும் அவரிடமிருந்து பக்தவச்சலம் மற்றும் கோவிந்தசாமி ஆகியோர் அந்நிறுவனத்தை வாங்கி நடத்தி வந்தார்கள் என்றால் சரியல்ல. காட்டுபாக்கத்தில் பக்தவச்சலம் மற்றும் கோவிந்தசாமி ஒரு குடை கம்பெனி ஆரம்பித்து நடத்தி வந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. சி அட்டவணை சொத்தில் பக்தவச்சலம் மற்றும் கோவிந்தசாமி ஒரு செங்கல் சூளை நடத்தி வந்தார்கள் என்றால் சரியல்ல. அது காலி மனை. மேலும் சி அட்டவணை சொத்தில் 1980ல் பக்தவச்சலம் மற்றும் கோவிந்தசாமிமும் அவர்கள் இருவரும் பங்குதாரர்களாக இருந்து விஸ்வஜோதி பிரிக்ஸ் இண்டஸ்டிரீஸ் என்ற செங்கல் சூளை நடத்தி வந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. விஸ்வஜோதி பிரிக்ஸ் ஒர்க்ஸ் கூட்டாண்மை நிறுவனம் தவிர வேறு தொழில் செய்து வந்ததன் பேரில் தனிப்பட்ட வருமானம் இருந்து வந்தது என்றால் சரியல்ல.